பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை 10.03.2024 கதிர் 124

# தொங்கு பாலத்திலிருந்து ரணில் கரைசேர்த்தது ராஜபக்சக்களையே

## மக்களை அல்ல என்று சஜித் குற்றச்சாட்டு

தொங்குபாலத்திலிருந்துநாட்டு மக்களைஅல்லநாட்டைஅழித்த ராஜக்ஷக்களை மாத்திரமே ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க கரைசேர்த்துள்ளார் என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் நடைமுறைப்படுத்தப்படும் 'மக்கள் அரண்' வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம், யாப்பஹுவ தேர்தல் தொகுதியின் தலதாகம சந்தியில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழு நாடும் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டாலும், நாட்டின் மின்சாரக் கட்டணம் 500 - 600 சதவீதம் வரை அதிகரித்தது, நீர்க் கட்டணம் அதிகரித்து, வாழ்க்கைச் சுமை அதிகரித்து, வேலையிழப்பு அதிகரித்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, இளைஞர்கள் வீதிக்கு இறங்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

கொவிட் காலத்தைப் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் சுயாதீன வேட்பாளராக நிற்பார்என்றுஒருகுண்டைத்தூக்கிப் போட்டிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர். கட்சி ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தாலும் அந்தக் கட்சியின் ஊடாகத் தேர்தலில் போட்டியிடுவதில் ரணில்ஆர்வம்காட்டவில்லைஎன்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. அதேநேரம் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுர பிரிய தர்சன யாப்பா மற்றும் நிமல் லன்ஸா ஆகியோரின் முயற்சியில் தனக்காகஒருபுதியஅரசியல்கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ரணில் தீவிரமாக இருந்தார். ஆனால் இப்போது அந்ததக் கூட்டணியும் வேலைக்குஆகாதுஎன்கிறமுடிவுக்கு அவர் வந்துவிட்ட மாதிரித்தான் தெரிகிறது. அதனாலேயேஅவர்சுயாதீனமாகத்தேர்தலில்நின்றுஅனைத்துத் தரப்பினரின்ஆதரவையும்பெறுவார் என்று கட்சியின் செயலாளர் கூறத் தலைப்பட்டுள்ளார்.

எப்படியிருந்தாலும் தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என்று ரணில் விக்கிரமசிங்க இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.மதில்மேல்பூனையாக ☞ 2

## 17 வயது சிறுமி ஒருத்தி கழுத்தறுத்துக் கொலை

கழுத்தறுத்துக் கொல்லப்பட்ட நிலையில்நாணயக்காரமாவத்தையில் 17 வயதுச் சிறுமி ஒருத்தியின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவில் நடந்த இந்தக் கொலையில் உயிரிழந்தவர் தல்கஹவத்த, கரந்தெனியபிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய ஹன்சிகா நதிஷானிஎன்றசிறுமிஎனஅடையாளம் காணப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டியில் சென்ற சிலர் சிறுமியை கரந்தெனிய, தல்கஹாவத்த பிரதேசத்தில் வைத்துபலாத்காரமாகத்தம்முடன் ☞ 8

## நாணய நிதியத்துடனான பேச்சை புறக்கணிக்க 'சக்திகள்' தீர்மானம்

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் நாளை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமல் இருக்க சில அரசி யல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஆகியன கலந்துகொள்வதில்லையென தீர்மானித்துள்ள நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இரட்டைநிலைப்பாட்டில் உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பில் அதன் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு ☞ 2

## கடந்த காலத்தைப் போன்றே கட்சிகள் தப்பிச் செல்கின்றன

### இராஜாங்க அமைச்சர் கவலை

அரசியல் கட்சிகள் கடந்த காலத்தினைப் போன்று மீண்டும் பொறுப்புகளில்இருந்தும் சவால்களில் இருந்தும் தப்பிச்செல்லும்நிலைமை தெரிகிறது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன்பேச்சுநடத்த வரும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பினை சில கட்சிகள் மறுத்து வரும் நிலையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## சுயாதீன வேட்பாளராக களம் காண்பார் ரணில்

### ஐ.தே.க. செயலர் அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று ஐக்கியதேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்தரங்கேபண்டார தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில்நேற்றுச செய்தியாளர்களிடம் அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், ☞ 8

### யாழ். வானில் 60000 அடி உயரத்திலிருந்து

## பரசூட் மூலம் குதித்து வான் படை சாகசம்



இலங்கை வான் படையின் சாகசநிகழ்ச்சி நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம் பெற்றது. 6000 அடி உயரத்தில்ஹெலிக்கொப்டரில் இருந்து குதித்து படையினர் சாகசம் நிகழ்த்தினர். வான்படையின் 73 வது ☞ 8

## வெடுக்குநாறியில் பொலிஸார் புரிந்தது கடும் அடாவடித்தனம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டம்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்அனைத்தும்அடாவடித்தனம் என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கதை சீர்குலைக்கும்வகையில் அமைகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பளையில்ளிபொருள் நிலையத்திறப்புவிழாவில் நேற்றுக்கலந்துகொண்ட அமைச்சரிடம் செய்தியாளர்கள், வெடுக்குநாறியில் சிவராத்திரி நிகழ்வைப் பொலிஸார் குழப்பியது தொடர்பில் கேள்வி எழுப்பினர் . அதற்குப் பதிலளித்த அவர் தெரிவித்ததாவது:

சிவராத்திரி ☞ 2

## கைது செய்த பின் காரணம் தேடுவது இலங்கைப் பொலிஸ் மட்டுமேதான்

### வேலன் சுவாமிகள் காட்டம்

உலகிலேயே இலங்கைப் பொலிஸார்தான் கைது செய்த பின்னர் அதற்கானகாரணத்தைத் தேடுபவர்களாகஇருக்கின்றார்கள் என்று தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

வவுயாவில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

வெடுக்குநாறி மலையில் நாம் சிவ ராத்திரி பூஜைவழிபாடுகளுக்கானஆயத்தங்களை முன்னெடுத்துக் கொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸார் ☞ 8

## வெடுக்குநாறியில் பொலிஸ் அடாவடியை கண்டித்து நாளை நல்லூரில் போராட்டம்

வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி சிவன்கோயிலில்சிவராத்திரிவழிபாடுகளைக்குழப்பிய பொலிஸாரின் செயலைக் கண்டித்தும் அங்கு கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்கவலியுறுத்தியும் நாளை நல்லூரில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கூட்டமைப்பு இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. அந்தஅழைப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுமுன்தினம் வெடுக்குநாறிமலைஆதி சிவன் கோயிலில் மகா சிவராத்திரி வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுபொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகத்தையும் மிகுந்தமனவேதனைக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப்புனிதமான விரத நாளில் அப்பட்டமாகமறுக்கப்பட்டு மிகமோசமாகசைவசமய விழுமியங்களைப்புனித சடங்குகளைஅவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.அதன் உச்சக்கட்டமாகத் ☞ 2

## இனி இது .....

அமர்ந்துகொண்டிருக்கின்றார். போட்டியிடும் ஆசை இருந்தாலும் மக்கள் ஆணையைக் கேட்டு மீண்டும் தோல்வியுற்றவராக ஜனாதிபதிப் பதவியிலிருந்து வெளியேறுவதாஅல்லதுஜனாதிபதித் பதவியிலிருந்துநேரடியாகஅரசியல் ஓய்வுக்குச் செல்வதா என்பது தொடர்பில்அவருக்குள்குழப்பங்கள் அதிகம் இருக்கின்றன, அதேநேரம் அவர் தனக்கான வாய்ப்புக் குறித்து இறுதிக் கணம்வரை அக்கறை செலுத்தியபடியே இருக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் புதிய கூட்டணியைக் கட்டியமைக்கும் முயற்சிகளும் ஒருபுறத்தில் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. பஸில் ராஜபக்ச இலங்கை திரும்பிய தினத்தன்று, இந்தப் புதிய கூட்டணியின் கூட்டம் ஒன்று மகிந்த அமரவீரவின் வீட்டில் நடந்தது. எதிர்கால அரசியல் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவேஇந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். இதில் லான்சா குழுவின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரான நிமல் சிறிபால டி சில்வாவும் கலந்துகொண்டனர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு, புதிய கூட்டணியின் பதவிகள் எவ்வாறு பிரிக்கப்படவேண்டும்என்பதுஇந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. புதிய கூட்டணியின் தலைவராக அனுர பிரியதர்ஷன யாப்பா நியமிக்கப்படுவார். செயலாளராக சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்தமஹிந்த அமரவீர நியமிக்கப்படவுள்ளார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவுகளுடன் அமரவீரவும் நிமல் சிறிபாலவும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து நிலைமை குறித்து அவருக்குத் தெரிவித்தனர் என்றும் அறிய வந்தது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## தொங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலநாட்டில்ஒருபுதியஇயல்புநிலை ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு சுமைகள் அதிகரித்து வரும் நிலைமையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பார்வையில் புதிய இயல்பு நிலையாக உள்ளது.

இன்று சில தரப்பினர் கோப்பு மூடைகளை காட்டி திருடர்களை பிடிக்க அதிகாரம் கோருகின்றன. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும், தனது ஐக்கிய சட்டத்தரணிகள் குழு, மக்களுக்கானபுத்திஜீவிகள்பேரவை மூலம் உயர் நீதிமன்றத்துக்கு சென்றுஎதிர்க்கட்சியில்இருந்தவாறே ராஜபக்ஷக்கள்மக்களின்அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்ற தீர்ப்பை பெற்றுக்கொண்டது. திருடர்களைப் பிடிப்போம் என கோப்புகளை காட்டி அரசியல் நாடகங்களை நடத்தாது ஐக்கிய மக்கள் சக்தி செயல் ரீதியாக நடவடிக்கை எடுத்தது.

நாட்டு மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும்போது ஜனாதிபதிதலைமையிலானநாட்டை அழித்த மொட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்சக்களுடன் இணைந்து தமது விருப்பப்படி நடந்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் 113 பேர் சுகாதாரத்துறையில் நடந்த மோசடிகளுக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்துகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் ஆட்சியில் இந்நாட்டிலுள்ள தேசிய வளங்கள், மக்களின் வளங்கள், சொத்துக்கள் மற்றும் பணத்தை அபகரித்த குழுக்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் வைப்புச் சொத்துக்கள் மற்றும் வளங்களை பராட்டே சட்டத்தின் மூலம் ஏலம் விடுவதற்கான மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

2024ஆம் ஆண்டு தேர்தல் வருடமாக இருப்பதால், ஏல நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்தாலும், தனியார் நிதி நிறுவனங்கள் போட்டிக்கு ஏலங்களை நடத்தி வருகின்றன - என்றார்.

## டக்ளஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் என்பது இந்துக்களின் முக்கியமான நிகழ்வு. இதனை முன்னிடு குறித்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள்சென்றபோதுபொலிஸார் அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர் என்று செய்தி கள் தெரிவிக்கின்றன.

அதிலும் ஆதி சிவன் கோவிலில் நீதிமன்றஅனுமதியுடன்சிவராத்திரி வழிபாட்டில்ஈடுபட்டுக்கொண்டிருந்த சிவ பக்தர்களையும், அவர்களின் வழிபாட்டையும்அவமானப்படுத்தும் வகையில்பொலிஸார்நடந்துகொண்ட விதம்அவர்களதுஅடாவடித்தனமாகவே இருக் கின்றது.

ஆலயதரிசனம்செய்வதுஅவரவர் உரிமை.இதைத்தடுப்பதற்குஎவருக்கும் அதிகாரம்கிடையாது. அப்படியிருந்தும் வெடுக்குநாறியில் பொலிஸார் தடைகளை ஏற்படுத்துவதற்கும் அடாவடித்தனங்களில்ஈடுபடுவதற்கும் யார்அனுமதிகொடுத்தது?பொலிஸாரின் செயலைஒருபோதும்ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்தவாரம் நடைபெறவுள்ள அமைச்சரவையியின் கவனத்திற்கும் இந்த விடயத்தைக் கொண்டு செல்லவுள்ளேன். இனிவருங் காலங்களில் பொலிசார் இவ்வாறான செயற்பாடுகளை மெற்கொள்ளாதிரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்-என்றார்அவர்.

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறேதும்செய்யாதசிவனடியார்கள் எண்வர் விரத மிருந்து பூஜையில் ஈடுபட்ட தருணம், மோசமாகத் தாக்கப்பட்டுகைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் .

பூஜைமற்றும்படையல்பொருள்கள் சப்பாத்துக்கால்களால்சீருடைதரித்த நபர்களால் தட்டி அகற்றப்பட்டதுடன் பூசகர் சிவத்திரு மதிமுகராசா மீளவும் கைது செய்யப்படுள்ளார். அவருடன் மேலும் எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ஈனச் செயல்கள் மிகப் பாரதூரமாக சைவத்தமிழர்களின் மனதைக் காயப்படுத்தியுள்ளதுடன் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என்பதை உலகுக்கும் அரச உயர்பீடத்துக்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொருதமிழர்களினதும்கடமை யாகும்.

உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையானவிரதம்மகாசிவராத்திரி ஆகும். அந்த வகையில் இந்த மகா சிவராத்திரி தினத்தில் வவுனியா மாவட்டத்தில்உள்ளதொன்றுதொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோயிலில் நடைபெற்ற மோசமான சம்பவங்களைக் கண்டித்தும் கைது செய் யப்பட்ட பக்தர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் நாம்அணிதிரண்டுஎதிர்ப்பைப்பதிவு செய்வோம்'-என்றுஅந்தஅழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாமனை கொலைசெய்த மருமகன் தன் உயிரையும் மாய்க்க முயற்சி

## வைத்தியசாலையில் சேர்ப்பு

தனது மாமனாரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்ததாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 81 வயதுடையவராவார்.

குடும்பத் தகராறு எல்லை மீறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், தனது மாமனாரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ள நிலையில், பின்னர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார்.

இதனையடுத்து இவர் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அ'புரத்தில் விபத்தை ஏற்படுத்தி தப்பி ஓடிய சாரதி கைதானார்

அநுராதபுரம், ரம்பேவ பகுதியில் நேற்று (சனிக்கிழமை) விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பி ஓடிய கெப் ரக வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெப் ரக வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த இந்த நபர் வீதியில் சென்றவர்களை மோதித் தள்ளி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

விபத்தில் காயமடைந்த மூன்று ஆண்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பெண்கள் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பி ஓடிய சாரதி அவருடன் இருந்த இரு நபர்களுடன் அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் இடைமாறும் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் வாகனம் பழுது பார்க்கும் கடையொன்றின் ஊழியர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். (05)

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பம்வழங்கப்படுமெனஜனாதிபதி ரணில் விக்ரசிங்க அறிவித்திருந்தார்.

அதன்படி,நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சிகளின் தலைவர்களுக்கு நாளை திங்கட் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றுஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதிசெயலகம்அறிவித்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளாமலிருப்பது உசிதமானதென்பதே தமது கட்சியில் பெரும்பாலானோரின் நிலைப்பாடு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தமது கட்சி கலந்துகொள்ளாது என்று தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு தமக்கு அழைப்புக்கிடைத்ததாகவும் பேச்சில் கலந்துகொள்ளும் விவகாரம் தொடர்பில் சம்பந்தனே தீர்மானிக்கவேண்டும் என்று தான் ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் ஆகவே அந்தப்பேச்சில்தான்கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் இலங்கைத் தமிழ்அசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு தனக்கும் அழைப்புக் கிடைத்ததாகவும் தான் அதில் கலந்து கொள்ளவுள்ளார் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாணய நிதியத்துடனான பேச்சில் கலந்துகொள்வதில் ஆட்சேபனை இல்லை என்றாலும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு எதிர்க்கட்சியினர் கூட்டாகச் சில தீர்மானங்களைஎடுக்கும்வகையில் கலந்துரையாடியிருக்கலாம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்ரவூப்ஹக்கீம்தெரிவித்தார்.

இதேவேளை,இந்தபேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு தமக்கு அழைப்புக் கிடைக்கவில்லையென தமிழ்தேசியமக்கள்முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# எமது நிலத்தை எம்மிடம் ஒப்படைத்துதவுங்கள்: தபால் அட்டை மூலம் ஜனாதிபதிக்கு கோரிக்கை

## முல்லைத்தீவிலிருந்து அனுப்பிவைப்பு








நிலத்தை இழந்த மக்களின் குரல் அமைப்பின் ஊடாக 'எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்' எனும் தொனிப்பொருளில் வட மாகாண ரீதியாக முப்படைகள் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி, தபால் அட்டை மூலம் ஜனாதிபதியை கோரும் நடவடிக்கை மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகிறது.

வட மாகாண ரீதியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மற்றும் முப்படையினர் கையகப்படுத்தி, அந்தக் காணிகளில் வணிக செயற்பாடுகள் மற்றும் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், காணிகளின் உரிமையாளர்கள் தமது காணியின்றி வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர்.

மக்களின் காணிகளில் குடியிருக்கும் இராணுவத்தினர், அந்தக் காணிகளை விடுவித்து, மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் காரி யாலயத்துக்கு ஐயாயிரம் தபால் அட்டைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பல்வேறு காணிகளை சேர்ந்த மக்களை இணைத்து ஜனாதிபதிக்கான தபால் அட்டையை அனுப்புவதற்கான பணிகள் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படைகளால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற முக்கியமாக கேப்பாப்புலவு வட்டுவாகல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் தமது காணிகள் முப்படைகளால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் உள்ள மக்களை இணைத்து இவர்களினூடாக தபால் அட்டைகளை அனுப்பி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முன்னதாக காணி உரிமையாளர்கள் மெசிடோ நிறுவன பிரதிநிதிகள், சூழலியல் மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் காணியை இழந்த மக்களுக்கிடையில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்தே, தபால் அட்டைகளை பூர்த்தி செய்த மக்கள் முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று, அங்கு தபால் அட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

(05)

# மட்டக்களப்பில் மனிதப் பாவனைக்கு உதவாத ஜூஸ் விற்பனை செய்த கம்பனிக்கு அபராதம்

மட்டக்களப்பில் மனித பாவனைக்கு உதவாத ஜூஸ் விற்பனை செய்த கம்பனி முகாமையாளர், முகவர் மற்றும் விற்பனை செய்த வர்த்தகர் ஆகிய மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவானும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் வியாழக்கிழமை உத்தரவிட்டு வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைத்திருக்கும் அந்த ஜூஸ் போத்தல்களைக் கைப்பற்றி அழிக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் தலைமையிலான கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் த.மிதுனராஜ், எஸ்.அமிர்தாப், ஜே.யசோதரன் ஆகிய பொது சுகாதார பரிசோதகர்கள் கொண்ட குழுவினர் கடந்த டிசெம்பர் மாதம் வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது ஒரு வர்த்தக நிலையத்தில் ஜூஸ் போத்தல்களை கைப்பற்றி அதனை கொழும்பிலுள்ள பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பியது.

அதில் தரம் குறைந்த, நியமத்திற்கு மேலதிகமான சல்பர்டைஒக்சைட்டும் செயற்கையான நிறமூட்டும் பதார்தமான கார்மோசின், சன்செட் மஞ்சள் திகமாக கலந்துள்ளதாக பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டு இது மனித பாவனைக்கு உகந்தல்ல என அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஜூஸ் உற்பத்தி கம்பனி முகாமையாளர், விற்பனை முகவர், வர்த்தகர் ஆகியோருக்கு எதிராக பொது சுகாதார உத்தியோகத்தர் மிதுனராஜ் வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்ததையடுத்து நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவானும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

இதன் போது ஜூஸ் விற்பனை செய்த வர்த்தகரை 20 ஆயிரம் ஷரூபாவும், முகவரை 20 ஆயிரம் ஷரூபாவையும் பழச்சாறு உற்பத்தி கம்பனி முகாமையாளரை 40 ஆயிரம் ஷரூபாவுமாக 80 ஆயிரம் ஷரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டு மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் குறித்த ஜூஸ் பேத்தல்களை கைப்பற்றி அழிக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டளையிட்டார்.

(05)

# லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பெண்களுக்கான இணைய பாதுகாப்பு செயலமர்வு




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, லைகா ஞானம் அறக்கட்டளை மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியுடன் இணைந்து இளம் பெண்களின் நல்வாழ்வு மேல் கொண்ட அக்கறை நிமிர்த்தமாக டிஜிற்றல் முறைமை மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் 2024 மார்ச் 7 ஆம் திகதி பாடசாலை கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் 10 முதல் 13 ஆம் வகுப்பு வரை கல்விகற்கும் மாணவர்கள் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர். அடுத்தபெண் தலைமுறையினருக்கு இணையப் பாதுகாப்பு தொடர்பான தெளிவான அறிவூட்டலை வழங்குவதனூடாக பெண்களின் சுய பாதுகாப்பிற்கான ஸ்திரத்தன்மையை மேன்படுத்தக்கூடியதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த நிகழ்வு, 'பெண்களுக்கான டிஜிற்றல் பாதுகாப்பு மற்றும் டிஜிற்றல் நல்வாழ்வு' என்பதை கருப்பொருளாக கொண்டமைந்திருந்து. நிகழ்நிலையை (ஒன்லைனை) இயக்க தேவையான தெளிவான அறிவு மற்றும் நிகழ்நிலை தொடர்பான திறன்களை இளம் பெண்களிடையே மேம்படுத்துதலை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு அமைந்திருந்தது. அத்துடன் இது ஓர் இணையப் பாதுகாப்பு பற்றிய புரிதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி என்பதைத் தாண்டி டிஜிற்றல் பின்னடைவு கலாசாரத்திலிருந்து பெண்களை வளப்படுத்துவதையும் நோக்கம் ஆகக் கொண்டமைந்திருந்தது.

இந்த நிகழ்வின் பங்கேற்பாளர்களான இளம் பெண்கள், ஒன்லைனில் எதிர்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட சவால்களை வெற்றிக்கரமாக எதிர்கொள்ளும் வகையில் கலந்துரையாடல் மற்றும் செயற்பாட்டு அமர்வுகளும் இடம்பெற்றன. சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு மாணவர்களுக்கு இலகுவான முறையில் தெளிவூட்டல்களை அளித்தமைக்கு மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினர் நன்றிகளைத் தெரிவித்ததுடன் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இந்த முயற்சிகளுக்கு முழு மனதுடன் ஆதரவினையும் வழங்கியிருந்தனர். மேலும் குறித்த தினத்தில் மன்னார் அடம்பன் கிராமத்திலும் சமூக மட்ட பெண் தலைவர்களுக்கான இணையவழிப் பாதுகாப்பு தொடர்பிலான செயலமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கத்து.(05)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தால் உதவிகள்





சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இனால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் விடுதிக்கு 33 லட்சம் ஷரூபா பெறுமதியிலான மிகவும் அவசியமான மருத்துவக் கருவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

2021 - 2022 ஆண்டுக்குரிய மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல். ராஜ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் பீற்றர் முதற்பெண் லயன் சாவித்திரி பீற்றர் தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, லயன் டாக்டர் வை.தியாகராஜா, அனைத்து மாவட்டத் தலைவர் லயன் தேவா டி பீற்றர், லயன் பி.மகேந்திரன் ஆளுநர் சபை செயலாளர் லயன் பிரனீத் பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலைச் சமூகம் சார்பில் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி வாகீசன் கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

கடந்த காலத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கென சர்வதேச லயன்ஸ் கழகத்தால் கிடைக்கப்பெற்ற ஒரு கோடியே 40 லட்சம் ஷரூபா நிதியும் உள்ளூர் லயன்ஸ்களால் சேகரிக்கப்பட்ட 52 லட்சம் ஷரூபா நிதியிலும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு கோடியே 50 லட்சம் ஷரூபா நிதியில் வழங்கப்பட்ட ஒட்சிசன் சுவாசத் தொகுதி அமைத்துக்கொடுக்கப்பட்டு மிஞ்சிய நிதியே இந்தச் செயற்றிட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இன உறவுகளை மேலும் சிக்கலாக்கும் இலங்கை காவல்துறை நடவடிக்கைகள்

சிங்கள, தமிழ் இனத்தவர்களுக்கு இடையிலான சர்ச்சைக்குரிய விடயங்களில் இலங்கை காவல் துறையினர் பக்கச்சார்பாக நடப்பதும் தமிழர்களுக்கு விரோதமாக நடப்பதும் மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகியிருக்கின்றது. வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி சிவன் கோயிலில் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிவராத்திரி நிகழ்வைக் குழப்பி, அங்கிருந்தவர்களைப் பலவந்தமாக வெளியேற்றி காவல்துறையினர் அடாவடித்தனம் புரிந்திருக்கின்றார்கள். ஆளும் தரப்பின் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவே காவல்துறையினரின் செயல் அடாவடித்தனம்தான் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். அந்தளவிற்கு காவல்துறையினரின் செயல்கள் கட்டுமீறியவையாக உள்ளன.

வெடுக்குநாறிமலையைதமிழர்களும்சிங்களவர்களும் தமக்குரியதாக உரிமை கோரி வருகின்றனர். இங்கு வரலாற்றுக்கு முற்பட்ட பௌத்த அடையாளங்கள் காணப்படுவதாக சிங்களவர்களும் ஆதி காலம் தொட்டே இங்கு சிவ வழிபாடு இடம்பெற்று வருவதாகத் தமிழ் மக்களும் உரிமைகோரி வருகின்றார்கள். இது தொடர்பாக நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்குகள் இருக்கின்றன. விசாரணைகள் நடக்கின்றபோதும் மக்களின்வழிபாட்டுஉரிமையைமதித்துவழிகாட்டுதல்கள், நெறிமுறைப்படுத்தல்களுடன் அங்கு வழிபாட்டில் ஈடுபட நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது. அப்படியிருந்தும் சிங்கள பௌத்த பேரினவாத்தினால் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ள இலங்கைக் காவல்துறையினர் சைவ மக்களின் வழிபாட்டை தடுத்து நிறுத்திக் குழப்பி விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டுள்ளது. அதேவேளை இந்த மலைக்குப் பிக்களும் சிங்களவர்களும் வருகை தரும்போது அவர்களுக்குப் பாதுகாப்பும் வசதிகளும் செய்து தருகிறார்கள். ஆனால் தமிழர்களை அடித்து விரட்டுகிறார்கள்.

இவ்வாறு நடந்துகொள்வது இது முதல் தடவையன்று. வரலாறு முழுவதும் தமிழர்கள் விடயத்தில் இலங்கை காவல்துறையினர் தொடர்ந்து பராபட்சமாகவே நடந்து வருகின்றார்கள் என்கிற குற்றச்சாட்டு உண்டு. தற்போதும் கிழக்கில் மயிலத்தமடு மாதவனைப் பண்ணையிலும் காவல்துறையினர் இதுபோன்றே சிங்களவர்களுக்குச் சாதகமாக மட்டுமே நடந்துகொள்கின்றார்கள். அங்கு தமிழர்களின் மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமித்து சிங்களவர்கள் குடியேறியுள்ள நிலையில், அவர்களை அப்புறப்படுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்கஅறிவுறுத்தல்களை வழங்கிய பின்னரும்கூட காவல்துறையினர் அங்கிருந்து சிங்களவர்களை வெளியேற்ற மறுக்கின்றனர்.

கனதியான சிங்கள பௌத்த பேரினவாதக் கருத்தியல்களால் பாதிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காவல்துறை தன்னைச் சிங்களவர்களின் பாதுகாவலர்களாகவும் தமிழர்களின் எதிரிகளாகவுமே தன்னைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தி வருகின்றது. தமிழர்கள் சட்டதிட்டங்களை மதித்து அதற்கு உட்பட்டு நடத்துகின்ற சாதாரண விடயங்களையும் சிங்களவர்களுக்குச் சாதகமான நிலையில் இருந்தே காவல்துறையினர் அணுகுவது இந்த நாட்டின் சாபக்கேடு. 30 வருடப் போருக்குப் பின்னரும் அந்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பது பெரும் கவலைதரும் விடயம்.

காவல்துறை மற்றும் படைத்துறைகளில் போருக்குப் பின்னரான அணுகுமுறைக் கட்டமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஐ.நா. தனது பரிந்துரைகளில் தெரிவித்திருந்தது. அவற்றைச் செயற்படுத்தாதன் விளைவையே இவ்வாறு அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. எனவே இது விடயத்தில் ஆட்சியாளர்கள் அதிக கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# தயக்கம் தவிர்ப்போம்



**என். பத்ரி**

நாம் சொல்வதில் ஏதாவது தவறு ஏற்பட்டால், எல்லோரும் நகைப்பார்களே என்ற எண்ணத்தில் பலரும் தம் மனதில் உள்ள கருத்துகளை வெளியே சொல்லத் தயங் முன்வருவதில்லை.

பிறவியில் யாருக்கும் தயக்க குணம் அமைவதில்லை. அவரவர் வாழும் சூழ்நிலையைப் பொறுத்தே இந்த தயக்கம் உருவாகிறது. பெற்றோர், ஆசிரியர், நண்பர்,உறவினர் போன்று நம்மைச் சுற்றி இருப்பவர்கள்தான் இதை நம்மனதில் உருவாக்குகிறார்கள்.



தயக்கம் நம் செயல் சரியாக இருக்கவேண்டும் என்ற விருப்பத்தையும், தவறாக இருந்து விடுமோ என்னும் பயத்தையும் பிரதிபலிக்கிறது. நமது அன்றாட செயல்பாடுகளில் குறைபாடுகளை எதிர்கொள்ள நாம் பயப்படுவதே இதன் அடிப்படை காரணமாகும்.

தயக்கம் உளவியலுடன் தொடர்புடையது. சிலர் புதிதாக ஒரு செயலைச் செய்தால், பிறரது அங்கீகாரம் கிடைக்காதோ என்ற ஐயத்திலேயே அச்செயலை செய்யாமல் இருப்பதும் உண்டு. எல்லோரும் அறிந்த ஒரு விஷயத்தை “எனக்குப் தெரியவில்லை' என்று சொன்னால் அறிவு குறைந்தவன் என நினைப்பார்களே என்றெல்லாம் எண்ணுபவர்களும் உண்டு.



நம்மில் மூன்றில் ஒரு பங்கினருக்கு இந்தத் தயக்க மனப்பான்மை உள்ளதாக கூறப்படுகிறது. இவர்கள், அடிப்படையில் வாழ்வில் அளவற்ற ஆசைகளையும், குறிக்கோள்களையும் கொண்டவர்கள். தம்முடைய தயக்க சுபாவத்தினால் அத்தனையையும் கட்டிப் போடுகிறார்கள்.

பிறர் முன்னிலையில் நம் தவறு சுட்டிக் காட்டப்படும் போது, நாம் பெறும் அவமான உணர்வு இந்த தயக்க உணர்வை அதிகரிக்கிறது. ஒரு நிலையில் நாம் ஊக்கமுடன் செயலாற்றுவதைத் தடுக்கிறது. இறுதியில் தாழ்வு மனப்பான்மையில் கொண்டுபோய் விடுகிறது.

வகுப்பறையில் அளிக்கும் தவறான பதிலின் விளைவாக தரக்குறைவாக மதிப்பிடப்படுவோம் என்று மாணவன் பதிலளிக்க தயங்குகிறான். நாம் பார்வையாளர்களாக இருக்கும் இடத்தில் உண்மையை அறிந்திருந்தாலும், அதைத் தெரிவிக்கத் தயங்கி அமைதியாக இருப்பதுண்டு. நமது கருத்தைத் சொல்வதால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அஞ்சுகிறோம். அதனால் செயல்படத் தயங்குகிறோம்.

பெற்றோர் “வாயை திறக்காமல் சமர்த்தான பிள்ளையாக இருந்தால்தான் நாளைக்கு நல்ல பிள்ளையாக வருவாய்' என்ற ஒரு சான்றிதழை குழந்தைகளுக்கு கொடுக்கிறார்கள். எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது போலிருக்கிறது என்ற எண்ணம் குழந்தை மனதில் வலுக்கிறது. பின்னாளில் எதைப் பேசுவதற்கும் தயக்கம் உண்டாகி விடுகிறது.

ஏதாவது பேசிவிட்டால், ஏதாவது தப்பு செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற அச்சம் குழந்தைகளிடம் ஏற்படுகிறது. பெற்றோர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வரும் இந்த பயத்தால் ஏற்படும் தயக்கம் மேலும் வளர்கிறது. வெளித்தோற்றத்தில் அமைதியாகக் காட்சியளிக்கும் இவர்கள், மனத்திற்குள் போராடுகிறார்கள். பிறர் முன்னிலையில் பதற்றமடைகிறார்கள்.

பொதுவிடங்களில் பேச நினைத்ததை பேச முடியாமல் நாக்குழறுகிறார்கள். இதனால், பெரும்பாலும் தனித்து வாழ்வதை விரும்புகிறார்கள். இவர்களால் சிறுசிறு விஷயங்களை கூட சமாளிக்க முடிவதில்லை. திறமை இருந்தும் தோல்வியடைகிறார்கள்.

தயக்க நிலையிலிருந்து விரைந்து வெளியே வர முனைப்பு மிகவும் தேவை. எந்தெந்தச் சூழ்நிலைகளில் தயக்க எண்ணங்கள் உண்டாகிறது என்பதை ஆராய வேண்டும். மீண்டும் அதே சூழ்நிலை வந்தால், எப்படித் தயக்கமின்றி செயல்படுவது என்பதை திட்டமிட்டு ஒத்திகை செய்து கொள்ள வேண்டும். தயக்கமுண்டாக்கும் சூழ்நிலைகளைத் தவிர்க்காமல் அதை அடிக்கடி அணுகினால் தயக்கம் குறையும். உதாரணத்திற்கு, உயர் அதிகாரி ஒருவரைப் பார்க்கப் போவதில் தயக்கம் இருந்தால், அவரைப் பார்க்க வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் சந்தித்து விடவேண்டும். பயத்தினாலும், தயக்கத்தினாலும் பார்ப்பதை தவிர்க்கக் கூடாது.

பிறருடன் உரையாடும்போது புன்னகைத்தல், கை குலுக்குதல், கண்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசுதல், தலையசைத்து ஆமோதிப்பினைக் காட்டுதல் போன்ற பழக்கங்கள் நமது தயக்கத்தின் அளவைக் குறைக்கும்.

பிறர் பேசும்போது ஆவலுடன் கவனித்தல், பணியிடத்திலும், பொதுக்கூட்டங்களிலும் முக்கிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயலாற்றுதல், மற்றவர்களுடன் உரையாடுதலுக்குக் காரணமே இல்லாவிட்டாலும், பொது விஷயங்களைப் பேசுதல் நமது தயக்கத்தை குறைக்கும்.

தயக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், செயல்பட முடியாத அளவிற்கு மனச்சோர்வடையும் போது, தேவையான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளுதல் அவசியம். எந்தச் செயலைச் செய்யும்போது தயக்கம் வருகிறதோ, அந்தச் செயலை திரும்ப திரும்பச் செய்யும் பயிற்சி ஒன்றுதான் நமது தயக்கத்தை விரட்டும்.

ஒரு சிக்கலான சூழ்நிலையை தைரியமாக எதிர்கொண்டு அதைக் முறையாக கையாளும் திறமையிருந்தால், எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளக் கற்றுக் கொள்கிறோம். விமர்சனங்களை நேர்மறையாக எதிர்கொள்ளவும், அதைச் சமாளித்து அதிலிருந்து சிறந்ததை எடுத்துக் கொண்டு நம்மை வடிவமைத்துக் கொள்ளவும் கற்றுக்கொள்கிறோம்.

பயத்தையும், தயக்கத்தையும் புறக்கணிக்கும் ஒரு நொடி நம் வாழ்க்கையை மாற்றும் தருணமாக அமையலாம்.

வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளை நாம் தினமும் வெற்றிகரமாக கடக்க வேண்டியிருக்கிறது. அவற்றிலிருந்து நேர்மறைகளைப் பிரித்தெடுத்து, எதிர்மறைகளை சமநிலைப்படுத்துவதன் மூலம் நம் வாழ்க்கையை அழகாக மாற்றமுடியும்.

இதற்கு தடைக்கல்லாக உள்ள தயக்கம் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்கிப் பயணிப்பதின் மூலம் நம் வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் அதா உல்லா எம்.பியுடன் விசேட சந்திப்பு



(பாறுக் ஷிஹான்)

தேசிய காங்கிரஸின் தலைவரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதா உல்லாவை (எம்.பி) அட்டாளைச்சேனை ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் சந்தித்து பிரதேச அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினர்.

அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்திக் குழு தலைவராகவும் செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நிதியொதுக்கீடுகளை செய்துவருகின்றார்.

இந்நிலையில் அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவிலும் வீதிகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது குறித்த பகுதியில் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ள கடற்கரை வீதி, ஆற்றங்கரை வீதி ஆகியவற்றின் தற்போதைய நிலை தொடர்பாகவும், குன்றும் குழியுமாக காணப்படும் உள்ளக கிறவல் வீதிகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதுடன் குறித்த வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின் போது ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகரும், சட்டத்தரணியுமான ஏ.எல்.நியாஸ், தேசிய காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயலாளரும், அரசியல் உயர்பீட உறுப்பினருமான எஸ்.ஏ.பாயிஸ், தேசிய காங்கிரசின் அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவு அமைப்பாளர் ஏ.எல்.மனார், ஈஸ்டன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எல்.பெரோஸ் கான் செயலாளர் ஜே.சஜித், பொருளாளர் பீ.பஸ்லி, முகாமையாளர் சிபாத் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# வெள்ளவத்தையில் வீதியின் ஒரு பகுதியில் பெரும் குழி

காலி வீதி வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தைக்கு அருகில் உள்ள சந்தியில் காலி நோக்கி செல்லும் பாதையின் ஒரு பகுதி மூடப்பட்டுள்ளது.

சுமார் 4 அடி விட்டம் கொண்ட பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே பாதையின் ஒரு பகுதி மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பஸ்கள் மற்றும் ஏனைய கனரக வாகனங்கள் கடல் மார்க்கமான வீதி ஊடாக கொழும்பு நோக்கிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

# 07 வயது முதியவர் யாழில் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் 107 வயது முதியவர் ஒருவர் வியாழக்கிழமை சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி உதயசூரியன் பகுதியினைச் சேர்ந்த பூச்சி வேலுமுத்து என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

1917ஆம் ஆண்டு இவர் பிறந்துள்ளார். இவர் தனது 107 வயது பிறந்தநாளை அண்மையில் வெகுவிமர்சியாக கொண்டாடியிருந்தார். இவருக்கு 10 பிள்ளைகள், 75 பேரப்பிள்ளைகள், 25 பூட்டப்பிள்ளைகள் 5 கொள்ளுப் பேரப் பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த ஒருமாத காலமாக சுகவீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார். இலங்கையில் ஆங்கிலேயர் ஆண்ட காலப்பகுதியில் இவர் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நீரில் அடித்துச்செல்லப்பட்ட இத்தாலியப் பெண் மீட்பு

கொட்டவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிரிஸ்ஸ கடலில் நீராடிய இத்தாலிய பெண் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் 47 வயதுடைய இத்தாலிய பிரஜையாவார்.

மிரிஸ்ஸகடற்கரையில் கடமையில் இருந்த உயிர்காப்பு பிரிவினர் குறித்த இத்தாலிய பெண்ணைப் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சத்திர சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கியது சாய்ந்தமருது அல் அமானா நற்பணிமன்றம்







(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது அல் அமானா நற்பணி மன்றத்தால் சத்திரசிகிச்சைக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வும், மன்றத்தின் ஒன்றுகூடலும், ஊடக சந்திப்பும் அமைப்பின் தலைவர் ஏ.எல்.ஏ. பரீட் ஹாஜி தலைமையில் சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள அமைப்பின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இங்கு சாய்ந்தமருதைச் சேர்ந்த சகோதரி ஒருவரின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை தேவைக்காக ஒருதொகை நிதி அவரது உறவினரிடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அல் அமானா நற்பணி மன்றத்தின் செயற்பாடுகள் அதன் உருவாக்கம் தொடர்பில் விரிவாக அமைப்பின் தலைவர் எடுத்துரைத்தார்.

1986 ஆம் ஆண்டு அன்ஸாரிகள் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, அந்த சங்கத்தினூடாக மீனவர்களின் இழப்புக்கள் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் மதம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் பின்னர் கடந்த 2004 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட (கடல் பேரலை) சுனாமியின் பின்னர் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அந்த மக்களுக்கு உதவுவதற்காக அன்ஸாரிகள் சங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒன்றியம் என்ற பெயரில் உருமாறி மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு உதவியதாகவும் தெரிவித்தார். காலப்போக்கில் மக்களின் தேவைகள் அதிகரித்துச் சென்றதன் காரணமாகவும் அரசாங்கம் மற்றும் உதவு நிறுவனங்களிடம் மக்களின் பிரச்சினைகளை கொண்டுசெல்ல பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் தேவை உணரப்பட்டதால் அப்போதைய பிரதேச செயலாளரின் உதவியுடன் கடந்த 2008 ஆம் ஆண்டு அல் அமானா நற்பணி மன்றம் என்ற பெயரில் மன்றம் பதிவு செய்யப்பட்டு மிகுந்த வீரியத்துடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஏ.எல்.ஏ. பரீட் ஹாஜி, மிகக்குறுகிய நிலப்பரப்புக்குள் வாழும் சாய்ந்தமருது மாளிகைக்காடு மக்கள் சுனாமி கடல் பேரலையின் காரணமாக தாங்கள் வாழ் இடங்களை இழந்து தவித்தபோது அரசு ஊரின் மேற்குப் புறமாகவுள்ள காணிகளை சுவீகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுத்தது. இதில் பாதிக்கப்பட்ட அனைவரும் வீடுகளை பெறவில்லை குறித்த பாதிக்கப்பட்டோர் ஸ்தாபிக்கப்பட்ட புதிய குடியிருப்புக்களை அண்டிய பிரதேசங்களில் காணிகளை சிறு சிறு துண்டுகளாக கொள்வனவு செய்து அவர்களது வாழ்விடங்களை அமைத்துள்ளனர்.

இவ்வாறான மக்களின் பிரதான தேவைகளான வீதி அமைத்தல் உட்கட்டமைப்புகளுக்கு உதவுதல் மற்றும் வாழ்வாதாரத்துக்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற பல்வேறு உதவிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். மக்கள் நல திட்டங்களை கொண்டு செல்வதில் தாங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டதாகவும் அவைகள் தேவையுடைய மக்களின் நீதியான போராட்டம் காரணமாக முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இதன்போது வீதிகளுக்கு பெயர்களை வைப்பது தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தார். நிகழ்வின்போது அமைப்பின் செயலாளர் எம்.எஸ். முபாறக், பொருளாளர் ஏ.சி.எம். பளீல், ஆலோசகர் எம்.ஐ.எம். பிர்தௌஸ் உள்ளிட்டவர்களுடன் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எஸ்.எச். ஆதம்பாவா (ராசாதி) அவர்களும் உரையாற்றினர். நிகழ்வில் மன்றத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

(05)



## பரசூட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்துவரும் கண்காட்சியின் ஒரு பகுதியாக இந்த சாகசமும் நிகழ்த்தப்பட்டது.

கண்காட்சி இன்றும் காலை 10 மணியில் இருந்து இரவு 10 மணி வரை நடைபெறும். பாடசாலை சீருடையில் வரும் மாணவர்கள் நிகழ்வை இலவசமாகப் பார்வையிடலாம். ஏனையோர் 100 ரூபாய் கட்டணம் செலுத்திப் பார்வையிட முடியும்.

இந்தக் கண்காட்சி மூலம் பெற்றுக்கொள்ளப்படும் முழுத் தொகையும் வடக்கு மாகாணத்தில் காணப்படும் 73 பாடசாலைகளைச் சீரமைப்பதற்கும் அந்த பாடசாலையில் கல்வி கற்கும் பின்தங்கிய மாணவர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்கும், அவர்களுக்கு 73 ஆயிரம் பாடசாலை புத்தகங்களை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் என்று வான்படை அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் 73 ஆயிரம் மரக்கன்றுகளை நடும் செயற்றிட்டமும் இதன் மூலம் தொடங்கியுள்ளது.

## சுயாதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பஸில் ராஜபக்சவும் சந்தித்துப் பேசினார்கள் என்பது எனக்குத் தெரியாது. அந்தச் சந்திப்பில் நான் பங்குபற்றியி ருக்கவுமில்லை.

எவ்வாறாயி னும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார். நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுவதாக இருந்தால் நாட்டை துணிச்சலாக வழிநடத்து பவரிடத் திலேயே அதனை முறையாக ஒப்படைக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் மீண்டும் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு பொருத்தமான தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அவர் சுயாதீன வேட்பாளராகவே போட்டியிடுவார். ஆப்போது அனைத்து தரப்பினரும் அவருடன் கைகோர்த்துக்கொள்வார்கள். நாட்டுக்காக அவ்விதமான தீர்மானம் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது - என்றார்

## கைது செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைந்து கொண்டிருந்தனர். எனினும், நீதிமன்றக்கட்டளையும் இல்லாது எந்தவிதமான உத்தரவுகளும் இல்லாது எம்மை தடுக்க முடியாது என்பதை நாம் அவர்களுக்குத் தொடர்ச்சியாகக் கூறிவந்தோம்.

ஆனால், அவர்கள் எமது வழிபாடுகளைத் தடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள். பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அதனை தடுத்து நிறுத்தி அவர்கள் ஏதேச்சதிகாரமாக அங்கிருந்து எம்மையும் மக்களையும் வெளியேற்றினார்கள்.

பூஜைகளுக்காக ஆயத்தம் செய்யப்பட்ட அனைத்தையும் சீரழித்தார்கள். அவர்களின் அராஜகமான செயற்பாடுகளை அனைவருமே வெளிப்படுத்தினோம்.

இதன்பி ன்னர் எட்டுப்பேரைக் கைது நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர். அப்போது அவர்களின் மீது எந்த வழக்கினை போடுவது என்பது குறித்து பொலிஸார் யோசித்துக் கொண்டுள்ளனர்.

உலகிலேயே இலங்கை பொலிஸார் தான் கைது செய்யப்பட்டதன் பின்னர் காரணத்தினை தேடுக்கின்ற ஒரேயொரு பொலிஸார் - என்றார்.

## 17 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழுத்துச் சென்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் நேற்றிரவுவரை கைது செய்யப்படவில்லை.



# மாணவர் மற்றும் கல்வியியலாளர்களுக்கு கிழக்கு சமூகசேவை சபையால் கௌரவம்







(நூருல் ஹுதா உமர்)

அரசியல் ஆளுமைகளை நினைவு கூறுதலும், இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கிழக்கு சமூக சேவைச் சபையின் தலைவர் யூ.எல்.ஏ ரஹ்மான் தலைமையில் வெள்ளிக்கிழமை கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கலந்துகொண்டு மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்களைக் கௌரவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மைமூனா அஹமட், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸீல், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். றியாழ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.ஏ. கலீலூர் ரஹ்மான், ஏ.எம். றியாஸ் (பெஸ்டர்), திருமதி பஸீரா றியாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம், வெகுஜன தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா, கல்முனை பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், கல்விமான்கள், நலன்விரும்பிகள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பல துறைகளில் இருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 75 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கப்பட்டதோடு சிறந்த ஆளுமைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# காரைதீவில் சமுத்திரத் தீர்த்தம் எடுத்துவந்து ஆதி சிவன் ஆலயத்தில் சிவலிங்க அபிசேகம்







(வி.ரி.சகாதேவயராஜா)

காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை சமுத்திர தீர்த்தம் எடுத்துவந்து ஆதி சிவனாலயத்தில் சிவலிங்க அபிஷேகம் செய்யப்பட்டது. ஊர்வலத்துடனான இந் நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக சிவலிங்கத்திற்கு ஆலயத்தால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது.

பின்னர் பக்தர்கள் சமுத்திர தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தனர்.

பிரதேச செயலகம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆதிசிவன் ஆலயம் ஆகியன இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்தன.

காலையில் மாணவரிடையே குருத்தோலை பின்னுதல், நிறைகுடம் வைத்தல் கோலம் போடுதல் போன்ற பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளில் போட்டி இடம்பெற்றன.

அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (05)

# நிகழ் நிலை காப்புச் சட்டம் குறித்து ஊடக செயலமர்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமைக்கான பொறுப்புக்கள் எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வொன்று நேற்று(சனிக்கிழமை) திருகோணமலையில் உள்ள சர்வோதய நிலையத்தில் இடம்பெற்றது.

மேற்படி செயலமர்வை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் நிகழ் நிலை காப்புச் சட்டம் தொடர்பில் அதன் மூலமான சட்டம் எவ்வாறாக காணப்படுகிறது தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டது.

இதில் சுதந்திர ஊடக இயக்கத்தின் முக்கியஸ்தர்கள், பிரதேச ஊடகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வுகள்






(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

'பலம் மிக்க பெண்கள் நாட்டின் வளம்' பெண்கள் சமுதாயத்தில் முதலீடு செய்யுங்கள் முன்னேற்றத்தை துரிதப்படுத்துங்கள் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வயிற்றில் அடித்ததால் தெருவுக்கு வந்த மக்களே 'அரகலய'வாக போராடினார்கள்

## பொய் சொல்கிறார் கோட்டா என்கிறார் மனோ

"சிங்கள பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு தீங்கு விளைவிக்கும் என்பதாலேயே தனக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒன்று திரண்டு அரகலவை நடத்தினார்கள்' என தன் நூலில் கூறும் கோட்டாபய ராஜபக்ஷ, வரலாற்று குற்றங்களில் இருந்து இன்னமும் கூட பாடம் படிக்காத ஓர் அறிவிலி.

சிங்கள-பௌத்தர் பலமடைவது இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. சிங்கள மொழி பேசுவதன் மூலமும், பௌத்த தரிசனத்தைக் கடைப் பிடிப்பதன் மூலமும் நானும்கூட சிங்கள பௌத்த சிந்தனையைப் பலப்படுத்தி வருகிறேனே! எமக்கு அதில் என்ன பிரச்சினை?

இந்நாட்டில் சிங்கள- பௌத்தம், பேரினவாதமாக மாறி, பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் என்ற இலங்கை பன்மைத்துவதை இல்லாது ஒழிப்பதே எமது பிரச்சினை. அதுதான் எமது நீண்டகாலப் போராட்டம். உங்கள் 'அரகலய' வுக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள 'சதி' என்ற நூல் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் கருத்து கூறியுள்ள மனோ எம்பி மேலும் கூறியவை வருமாறு -

கொழும்பிலும், நாடு முழுக்கவும் நடைபெற்ற அரகலவில் பங்கு பெற்ற மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தினர், 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு, வாக்கு அளித்தவர்கள். அவர்கள்தான், கோட்டாபயவின் முட்டாள்தனமான, பொருளாதார கொள்கைகள் காரணமாக வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன் தெருவுக்கு வந்து போராடியவர்கள்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கூட இவை பிரச்சினைகள்தான். ஆனால், அவற்றையும் மீறிய இன, மத ஒடுக்குமுறைகளால் அவர்கள் துன்பம் அடைந்தார்கள். ஆங்காங்கே ஒரு சில தமிழ், முஸ்லிம் மக்கள் இறுதிக் கால கட்டங்களில் அரகலவில் கலந்து கொண்டார்கள். சில அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அதீத கற்பனை பண்ணிகொண்டு, 'இத்தோடு சேர்த்து இந்நாட்டில் இனவாதத்தையும் ஒழித்து விடுவோம்' என முழங்கியதும் உண்மைதான். 'நல்லது நடந்தால் சரி' என நாம் அவர்களை வாழ்த்தியதும் உண்மைதான். அவர்கள் இன்று அரசியல் அரங்கில் அந்த அதிக பிரசங்கி தமிழ், முஸ்லிம் இளைஞர்களைக் காணவில்லை.

எது எப்படி இருந்தாலும், அரகல முழுக்க முழுக்க, 'வயிற்றில் பாரிய அடி விழுந்ததுடன், தெருவுக்கு வந்த சிங்கள பெருந்திரள் மக்களால்' நடத்தப்பட்டது ஆகும். அதுவும் 2019, 2020 தேர்தல்களில் மொட்டு சின்னத்துக்கு வாக்களித்த மக்களால் நடத்தப்பட்டது. இதுதான் உண்மை. சிங்கள-பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்கு பிடிக்காததாலேயே, அவர்கள் அரகலவை நடத்தினார்கள் என்ற மாதிரி கூறி, உண்மையை திரிவு படுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கேர்ட்டாபய ராஜபக்ஷவுக்கு கடுமையாக கூறி வைக்க விரும்புகிறேன். - என்றுள்ளது. (05)

# கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மல்வத்தைப் பிரதேச வைத்தியசாலைக்கு வருகை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை, மல்வத்தை பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் சேவைகள் தற்போது மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

அதிகமான நோயாளர்கள் குறித்த வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக தினமும் வருவதுண்டு, வெளிநோயாளர் பிரிவில் போதுமான இடவசதிகள் இல்லாததன் காரணத்தால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பலரும் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து ஆரம்ப சுகாதார சேவையினை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சுமார் 2 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வெளிநோயாளர் பிரிவுக்கான புதிய கட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

அந்த வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை மக்கள் பாவனைக்கு கையளித்து வைத்தியசாலையின் சுகாதார நடவடிக்கைகளையும் பார்வையிடும் பொருட்டு அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், மல்வத்தை வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# சாய்ந்தமருது ஓய்வூதியர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

(எம். எப். றிபாஸ், அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

நிதியத்தின் தலைவர் ஐ. அப்துல் குத்தூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் திருமதி என்.வி.எம். லரீப் பிரதம அதிதியாகவும், அம்பாறை மாவட்ட ஓய்வூதிய நிதியத்தின் செயலாளர் ஏ. உதுமாலெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான் ஏ.சி. முகம்மட், அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ. சாஜிதா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதேவேளை நிதியத்திலிருந்து மரணித்த அங்கத்தவர்களுக்காக விஷேட துஆ பிராத்தனை இடம்பெற்றதுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறு திட்டங்கள் விரிவாக ஆராயப்பட்டு புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டன.

அமைப்பின் புதிய தலைவராக எம்.எம்.எம். இஸ்மாயிலும், செயலாளராக ஏ.எல். மீராலெப்பை, பொருளாளராக ஐ.எல். ஹம்ஸாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவராக யூ.எல்.ஏ. அஸீஸ் உபசெயலாளராக இசட் ஏ. லத்தீப் நிர்வாக உத்தியோகத்தர்களாக ஏ.எம். றசீட், எம்.சி. ஜமால்டீன் மற்றும் இசட்.ஏ. முனீர் கணக்கு பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (05)

# காசல் வீதி மகளிர் வைத்தியசாலைக்கு இன்குபேட்டர் இயந்திரம் கையளிப்பு

## 'மூச்சு' வேலைத்திட்டத்தின் கீழ்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் 'மூச்சு' வேலைத் திட்டத்தின் மற்றுமொரு கட்ட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பாரியார் திருமதி ஜலனி பிரேமதாஸவின் கரங்களால் 46 லட்சம் ஷரூபா பெறுமதியான இன்குபேட்டர் இயந்திரம் மற்றும் இரண்டு பேபி வார்மர் இயந்திரங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், பெண்கள், கற்பிணித் தாய்மார் மற்றும் தாதி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# அல் மிஸ்பாஹ் மகா வித்தியில் புனித நோன்பு சொற்பொழிவு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் புனித ரமழானை வரவேற்கும் முகமாக பாடசாலையில் மாணவர்களுக்கு நோன்பு காலத்தில் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான மார்க்க சொற்பொழிவு நடைபெற்றது.

பாடசாலையில் நடைபெற்ற அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அல் ஹாமியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.ஸி.தஸ்தீக்(ஹாமி) கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கால்பந்தாட்டப் போட்டியில் ஹமீத் அல் ஹுசெய்னி சம்பியன்









(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் வியாழக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கல்கிசை பரி. தோமா அணியிடம் ஆட்டத்தின் இரண்டாவது பகுதியில் கடும் சவாலை எதிர்கொண்ட ஹமீத் அல் ஹுசெய்னி 3 : 0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது.(05)

# 4 லட்சத்து 10 ஆயிரம் பெண் பிள்ளைகள் உடல் எடை குறைவு என ஆய்வில் தகவல்

## போசனைக் குறைபாடு காரணமாக

இலங்கையில் 5 முதல் 19 வயது வரையிலான 4 லட்சத்து 10 ஆயிரம் பாடசாலையில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள் போசணைக் குறைபாடு காரணமாக எடை குறைவாக இருப்பதாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளதாவது -

பிரித்தானிய 'லான்செட் மெடிக்கல் ஜர்னல்' இதழின் ஆய்வின் படி உலகில் போசணைக் குறைபாடு காரணமாக உடல் எடை குறைந்தவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது.

உலகளவில் உடல் எடை குறைவால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் வீதம் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையில் உள்ளது.

199 நாடுகளில் 22 கோடி பேரிடம் சுமார் 1,900 ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் உடற் திணிவுச் சுட்டி (உயரத்திற்கான எடை) முக்கிய அளவுகோலாக எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவரது உடலினது உயரத்திற்குப் பொருத்தமான நிறை எவ்வளவு என்பதைக் கணித்தல் உடற் திணிவுச் சுட்டி ஆகும்.

1990-2022 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், போசணைக் குறைப்பாட்டால் பாடசாலை பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி, மனவளர்ச்சி குன்றும் ஆபத்தில் உள்ளனர். எனவே, இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் தலைமுறை உருவாகும்.

போசணைக் குறைபாடு காரணமாக பிள்ளைகளிடையே என்சைம்கள் மற்றும் ஹோர்மோன்களின் உற்பத்தி பலவீனமடைந்து நாளாந்த உடல் செயல்பாடுகளில் தொய்வு நிலை ஏற்பட வழிவகுக்கிறது. அத்தோடு சிறுவர்கள் நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு காரணமாகப் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவார்கள்.

போசணைக் குறைப்பாடு நெருக்கடி மனவளர்ச்சி குன்றுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது நாட்டில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய கல்வி கற்ற மற்றும் புத்திசாலி இளைஞர்களின் எண்ணிக்கை குறைவதற்கு வழிவகுக்கும்.

நாட்டில் 17.8 சதவீத ஆண் பிள்ளைகள் தங்கள் வயதுக்குக் குறைவான எடையுடன் உள்ளனர். அதாவது 450,000 ஆண் பிள்ளைகள் உள்ளனர்.

அதன்படி, நாட்டில் மொத்தமான 860,000 பாடசாலை மாணவர்கள் எடை குறைவாக இருப்பதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. (05)

# பச்சிலைப்பள்ளியில் எரிபொருள் நிலையம்

## அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்





பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப் பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையதின் திறப்பு விழாவில் நேற்று (சனிக்கிழமை) பிரதம அதிதியாக கலந்து கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சம்பிரதாயபூர்வமாக எரிபொருள் நிலையத்தின் பெயர் பலகை மற்றும் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் , வடபிராந்திய கூட்டுறவு ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (05)

# மரக்கறி விலை குறைகிறது ஒரு கிலோ கரட் 200 ரூபாய்

பேலியகொட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலைகள் நேற்று (சனிக்கிழமை) குறைவடைந்துள்ளன.

அதன்படி , ஒரு கிலோ முள்ளங்கி 50 ரூபாவாகவும் , வெங்காயத்தாள் 100 ஷரூபாவாகவும் ஒரு கிலோ கரட் 200 ரூபாவாகவும், ஒரு கிலோ பூசணிக்காய் 250 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

மேலும் , ஒரு கிலோ கத்தரிக்காய் 120 ரூபாவாகவும் , ஒரு கிலோ முட்டைக்கோஸ் 150 ரூபாவாகவும் , ஒரு கிலோ பீட்ஷரூட் 220 ரூபாவாகவும் , ஒரு கிலோ பீன்ஸ் 280 ரூபாவாகவும் , ஒரு கிலோ தக்காளி 250 ரூபாவாகவும் , ஒரு கிலோ பச்சை மிளகாய் 300 ரூபாவாகவும், ஒரு கிலோ கறி மிளகாய் 400 ரூபாவாகவும், ஒரு கிலோ தேசிக்காய் 150 ரூபாவாகவும் , ஒரு கிலோ இஞ்சி 1,800 ரூபாவாகவும் குறை வடைந்துள்ளன. (05)

# லொறி – மோ.சைக்கிள் மோதிக் கோர விபத்து

## தந்தை, மகன் சாவு தாய் காயம்

கொழும்பு ஹைலெவல் வீதியில் கொஸ்கம, மிரிஸ்வத்த பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்கள் கொஸ்கம பிரதேசத்தை சேர்ந்த 44 வயது தந்தை மற்றும் 8 வயது மகனாவர்.

சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி பயணித்த சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்றின் சக்கரமொன்று திடீரென வெடித்ததில் , லொறி வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் உயிரிழந்துள்ள நிலையில் படுகாயமடைந்த தாய் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தனது மனைவியின் நிர்வாண படத்தை உறவினர்களுக்கு அனுப்பிய கணவர்

மனைவியின் நிர்வாணப் புகைப்படத்தை உறவினர்களுக்கு அனுப்பிய கணவர் தொடர்பில் மின்னேரியா பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்த சம்பவம் மின்னேரியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட மனைவி இது தொடர்பில் வெள்ளிக்கிழமை மின்னேரியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

நீராடிக்கொண்டிருந்த போது கணவர் தன்னை புகைப்படம் எடுத்தார் எனவும் பின்னர், அவர் அதனை உறவினர்களுக்கு அனுப்பினார் எனவும் மனைவி முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மின்னே ரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2024இல் வெளியிடப்பெற்றது.